1972 ஏப்ரல் 1]

கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. அங்கே பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் இருக்கிறது. அந்தக் கிணறை ரிப்பேர் செய்வதற்கும் ரூ. 3,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது பற்றிய பரிசீலனை இல்லை.

* 822 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிரி வட்டம், கவுத்தாசநல்லூர் தாழ்த்தப்பட்ட பொதுமக்களுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி, இருக்கின்ற கிணற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டம் உண்டா என்பதுதான், கிணறு இருக்கிறது என்ற பிரச்னையை நானும் நன்றாக அறிவேன். இனிமேலாவது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனைக்கு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அங்கே இருக்கின்ற மக்கள் தொகையை வைத்துத்தான் மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட அந்தக் கிராமத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்களுக்கு அந்தக் கிணற்றில் உள்ள தண்ணீர் போதுமானதாக இருக்கிறது. அங்கே மேல்நிலைத் தொட்டி தேவையில்லை. மேலே சொன்ன கிராமத்தில் அங்கேயிருக்கிற கிணற்றை ரிப்பேர் செய்வதற்கும் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். இரண்டாவது இடத்திலும் குடிதண்ணீர்க் கிணறு இருக்கிறது. அது போதுமானதாக இல்லை என்றால் அதற்காக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

திரு. மு. பழனிவேலன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் கிணறு கட்டுதல், ஆழப்படுத்தல் போன்றவற்றிற்குத் தொகை ஒதுக்கினால், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களுக்குப் பயன்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் காலனிகளுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றுதான் இந்த இலாக்கா நிதி ஒதுக்கம் செய்கிறது. ஆனால் அங்கேயிருக்கும் அதிகாரிகள், மற்றவர்கள் அதைத் தவறான முறையில் ஹரிஜன மக்கள் அல்லாதவர்களுக்கு உபயோகித்து வருகிறார்கள். அந்தப் பணம் அதற்காகவே பயன்படுத்தப்படுகிறதா என்று அவ்வப்போது அரசு நடவடிக்கை எடுத்துப் பார்த்து வருகிறது. அரசாங்கத்தின் கொள்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டு மென்பதுதான். அதிகாரிகளும் இன்னும் அங்கே இருப்பவர்களும் இதை உணர்ந்து, அந்த மக்களுக்கு என்று செலவழிக்க ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்களுக்காகவே செலவு செய்தால் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட இடமிருக்காது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுவாக இப்படி மேல்நிலை நீர்த் தொட்டிகள் ஒன்றியத்தின் சார்பில் அமைக்கும்போது, ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் மானியம் பெற்றுக் கொண்டு விட்டு, ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளுக்கு இணைப்புத் தருவது இல்லை. அப்படிப்பட்ட நிலையில், அந்தந்த ஒன்றியங்கள் இப்படிப்பட்ட ஹரிஜன் காலனிகளுக்கு முதலில் இணைப்புக் கொடுக்கப்பட்டால்தான், மற்ற இடங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை அரசாங்கம் உருவாக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்படிப்பட்ட குறைபாடுகள் வந்த காரணத்தால்தான், ஹரிஜனக் காலனிகளில் நீர்நிலைத் தொட்டி கட்ட வேண்டுமென்று தகவல் வந்தால், அந்த இடத்தில் உண்மையாகவே அது தேவைதானா, அதற்கு என்ன பணம் செலவாகும் என்பதைக் கண்டறிய இப்போதெல்லாம் நலத்துறை இயக்குநரே நேரில் சென்று பார்த்து ஒப்புதல் தருகிறார்கள். அதற்கு முன்னால் ஒன்றியத் தலைவர்கள், நலத்துறை அதிகாரி கள்தான் அதைச் செய்து கொண்டு வந்தார்கள். அதை மாற்றி இப்போது இந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மாறுதலின் காரணமாகத் தவறுதல்கள் இனி ஏற்பட வழியில்லை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவது சம்பந்தமாக முன்பெல்லாம் மாவட்ட நல அதிகாரிகளின் பொறுப்பில் இருந்தது. அது என் இப்போது மாற்றப்பட்டது ? மேலும், அங்கே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்களுக்கு அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டலாம் என்று உத்தரவு போட அதிகாரம் இருக்கும்போது, மாவட்ட ரீதியிலே உள்ள மாவட்ட நல அதிகாரிக்கு அந்த உத்தரவு போடும் அதிகாரம் கொடுக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு முன்னால் 2 பேர் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதற்குரிய காரணத்தை நான் சொன்னேன். காரணம் அங்கே இருக்கிற அதிகாரிகள், நலத்துறை அதிகாரிகள்கூட, அங்கேயிருக்கும் அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில், அங்கேயிருக்கிற சிப்பந்திகள் மற்ற அதிகாரிகளின் தூண்டுதலின் பேரிலும், ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்தப் பணத்தை, ரோடு போட, குடி தண்ணீர் தொட்டி போன்ற வேலைகளுக்குப் பயன் படுத்துவதற்காகக் கொடுக்கும் பணத்தை, ஹரிஜன மக்கள் அல்லாத கிராமங்களுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எனவே கீழ்மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள், மாவட்ட நலந்துறை அதிகாரிகள் ஆகியவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்காமல், இதற்காகவே இருக்கிற நலத்துறை இயக்குநருக்கே அந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இதைத் தான் மாண்புமிகு மு. பழனிசாமி, நா. வீராசாமி ஆகியோரின் கேள்விக்கும் பதிலாகச் சொன்னேன்.

Paraffin factory

* 823 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a paraffin factory in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்திய அரசாங்கத்தின் கூட்டுத்துறை நிறுவனமான திருவாளர்கள் மெட்ராஸ் ரிபைனரிஸ் லிமிடெட் கழிவு மெழுகிலிருந்து தோல், மெழுகுவர்த்தி, நெசவம் இன்னும் ஏனைய தொழில்களில் பயன்படும் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 23,000 மெட்ரிக் டன்களாகும்.

THIRU N. DENNIS : May I know the market potential for this product?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு அது கிடைக்கவில்லை என்ற குறை தான் இருக்கிறது. அதற்கு ஏராளமாகச் சந்தை இருப்பதாகத் தெரிகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த பாரபின் தொழிற்சாலையை மத்திய அரசே இங்கே அமைக்கிறார்களா? இந்த ஆண்டு அமைக்கப்படுமா? அப்படி அமைப்பதற்கு எவ்வளவு மூலதனம் போட வேண்டியிருக்கிறது?